[1972 ஆகஸ்ட் 24

கிணறுகள் வெட்டக் கடன்

* 315 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நிலவள வங்கிகள்மூலம் கிணறு வெட்டக் கடன் பெற வேண்டுமானால் ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையில் 600 அடிக்குமேல் இடைவெளி இருக்கவேண்டும் என்று விதிமுறை ஏதேனும் விதிக்கப்பட்டுள்ளதா?

(இ) இதன் முக்கிய நோக்கம் யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) 600 அடி என்ற விதிமுறை இல்லை ஒரு கிணற்றில் விசையேற்றம் வைத்திருந்தால் மற்றொரு கிணற்றின் தண்ணீர் பாதிக்காமல் கிணறுகள் அமைக்கப்பட வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நம்முடைய நாட்டின் நில அமைப்பு பல பாகங்களாகப் பிரிந்தும், பல இடங்களில் சிதறியும் இருக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகள் பயனடைய இந்த விதிமுறையைத் தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கடந்த இரண்டு வாரங்களுக்குமுன்தான் இது கொஞ்சம் தளர்த்தப்பட்டிருக்கிறது. ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் உள்ள தூரம் என்பதை மாற்றி ஒரு தாலுக்காவில் இத்தனை கிணறுகள் என்று மாற்றியிருக்கிறோம்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the basis on which the Government are going to dig wells for getting water through pumpsets?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இதற்காக நமக்குத் தனியாக நிலத் துறை இயக்குநர், நிலத்து நீர் இயக்குநர் தண்ணீர் பாதிக்கப்படாது என்று நற்சான்றிதழ் வழங்க வேண்டும்.

1972 ஆகஸ்ட் 24]

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவரவர்களே, இந்த கிணறு வெட்ட 600 அடி தூரம் என்பது ஆயில் எஞ்ஜின்கள், மின் ஏற்ற இயந்திரங்களுக்குத்தான் கணக்கில் எடுக்க வேண்டும். மற்றபடி தொலை ஏற்றம், கவலை போன்றவைகள் கணக்கில் வரக்கூடாது. எனவே. நிலவள வங்கிகளுக்குச் சுற்றறிக்கை விட்டு—இப்பொழுது 600 அடி தூரம் என்பதை எல்லாக் கிணறுகளுக்கும் கணக்கில் எடுக்கிறார்கள்—இந்த மின் ஏற்றங்களுக்கு மட்டும் கணக்கில் எடுக்க வேண்டுமென்று உத்தரவு இடப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது உண்மை. விசை யேற்றத்திற்குத்தான் இந்த கணக்கே ஒழிய, அதுவல்லாமல் கவலை வைத்திருந்தால் இது கணக்கில் எடுக்கப்படமாட்டாது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : துணைத் தலைவரவர்களே, இதில் லேண்ட் டெவலப்மெண்ட் பேங்க் மூலமாகக் கடன் கொடுத்து அதன் மூலமாக எத்தனை வீட்டுக் கிணறுகளில் தண்ணீர் வரவில்லை என்று ஏதாவது புகார் அரசுக்கு வந்திருக் கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, சில கிணறுகளில் தண்ணீர் வரவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. அதற்கு நிவாரணம் செய்ய ஏற்பாடுகள் ஆகிவிட்டன. அதற்காக மாநில நிலவள வங்கிகளில் தனியாக நிதி ஒதுக்கியிருக்கிறோம். அரசாங்கமும் கொடுக்கிறது.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, * இப்படி கண்டிஷன் போடுகிறார்கள். உலக வங்கியின் கட்டுப் பாட்டின்படி 600 அடி கிணறுவெட்ட முடியாது. உண்மையிலேயே ஹார்ட் ராக் ஏரியா என்றும் டெல் டாயிக் ஏரியா என்றும் பிரிக்க லாம். இந்த விதி டெல்டாயிக் ஏரியாக்களுக்கு மட்டும் பொருந் தும். தஞ்சாவூர் தென்னார்க்காடு மாவட்டங்கள் டெல்டாயிக் ஏரியாக்களாக இருக்கின்றன. மற்ற மாவட்டங்களெல்லாம் ஹார்ட் ராக் ஏரியாக்களாகத்தான் இருக்கின்றன. ஜியாலஜிகல் சொசைட்டி முடிவு செய்திருக்கிறது. எனவே இந்த கண்டிஷன் களை அதற்குப் பொருந்துமாறு அமைக்க உத்தாவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1972 ஆகஸ்ட் 24

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவர்கள் பதில் சொல்வதற்கு முன், * * * என்று உறுப்பினர் சொன்னதைச் சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இந்த விதி ஹார்ட் ராக்காக இருந்தாலும்சரி, சாஃப்ட் ராக்காக இருந்தாலும்சரி, ஒரு கிணற்றில் இருந்து விசையேற்றம் மூலமாகத் தண்ணீர் இறைக்கும்போது அடுத்த கிணறு பாதிக்கப்படக்கூடாது என்பது தான்.

திரு. ஏ. கே. துரைசாமி: இந்தத் திட்டத்தால் சிறு விவசாயிகள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை ரத்து செய்தாலொழிய விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. ஆகவே, அந்தத் திட்டத்தினை ரத்து செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ரத்து செய்வதாக இல்லை. இந்த ஒப்பந்தம் தமிழக அரசு சார்பாக நிதித் துறை செயலாளர் அவர்கள், மாநில நிலவள வங்கித் தலைவர், மத்திய அரசு, உலக வங்கி எல்லோரும் சேர்ந்து கையெழுத்திட்ட ஒப்பந்தம். இந்த விதி நியாயமாகவே தெரிகிறது. ஒரு கிணற்றில் தண்ணீர் இறைக்கும்போது அடுத்த கிணற்றில் தண்ணீர் பாதிக்கப் படக் கூடாது என்பது வேறு விஷயம்.

திரு. கே. கே. முத்தையா: 600 அடி என்பது ஒரு சிலர் பகுதிக்குத்தான் பொருந்தும். கனம் அமைச்சர் அவர்கள் பகுதியில் வேண்டுமென்றால் அப்படி இருக்கலாம். எங்கள் பகுதியில் இரண்டு மூன்று ஏக்கருக்கு இடையே கூட கிணறுகள் வெட்டுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதை மாற்றி யார் லோன் கேட்டாலும் கொடுக்கும் அளவில் விகிதாசாரத்தைத் திருத்தியமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மூலக் கேள்விக்கே விடை சொன்னேன். 600 அடி என்ற விதிமுறை இல்லை.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1972 ஆகஸ்ட் 24]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இருபது நாட்களுக்கு முன்பாக அரசுத் துறை விவசாயச் செயலாளர் அவர்களும், பிராஜக்ட் ஆபீசர்களும் இது சம்பந்தமாகப் பேசினார்கள். பேசி அந்தந்த இடங்களில் இருக்கும் நிலைமைக்கேற்ப 600 அடி என்ற விதியைத் தளர்த்திக் கொள்ளலாம் என்ற முடிவை எடுத்துள்ளார்கள் என்று அறிகிறேன். அதை அமைச்சர் அவர்கள் அமல்படுத்த முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த வினாவுக்கு ஏற்கெனவே விடை சொல்லியிருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையில் இருக்கும் தூரம் இவ்வளவு இருக்க வேண்டுமென்பதை நீக்கிவிட்டு ஒரு வட்டத்திற்கு இவ்வளவு புதிய கிணறுகள் என்று நிர்ணயித்திருப்பதாகத் தெரிகிறது. புதிய கிணறுகள் இவ்வளவு இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா அல்லது ஒரு வட்டத்திற்கு இவ்வளவு கிணறுகள்தான் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதிய கிணறுகள் எத்தனை, பழைய கிணறுகள் எத்தனை, விசையேற்றம் வைத்திருக்கக்கூடிய கிணறுகள் எத்தனை என்பதைப் பற்றி யெல்லாம் நிலவள இயக்குநர் அவர்கள் சான்றிதழ் கேட்டிருக்கிறார்கள்.

பல்லடம் பகுதிக்குக் குழாய்க் கிணறுகள்

* 316 வினா— திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சிப் பகுதியான பல்லடம் பகுதிக்குக் குழாய்க் கிணறுகள் அரசாங்கமே அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், எத்தனை குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.